[1979 மார்ச் 10

## உதகையில் பால் பவுடர் தொழிற்சாலை.

*வினா எண். 333—திரு. கே. உச்சி: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகையில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) உதகையில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு மீதான அரசின் முடிவு தக்க ஆதாரக் குறிப்புகள் கிடைக்கும் வரை தள்ளிப் போடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கருத்துரு ஊட்டி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து தற்பொழுது பெறப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.

(ஆ) மாவட்ட ஆட்சியாளரின் கருத்துருப்படி இத்திட்டத்தின் கீழ் ஆகும் செலவு ரூ. 70 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## லால்பேட்டையில் மருத்துவ மனை.

*வினா எண். 334—திரு. எ. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் லால்பேட்டை பேரூராட்சியில் அரசு பொது மருத்துவமனை அமைக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

இல்லை.

## ஆரணி மருத்துவ மனை.

*வினா எண். 335—திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணியிலுள்ள அரசு மருத்துவ மனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, விஸ்தரிக்கும் உத்தேசம் உள்ளதா ?

---

* உடுக்குறியிட்ட வினாக்கள் எண். 333 முதல் 337வரை விதி 35 (4)-ன் கீழ் நடவடிக்கைக்குறிப்பில் அச்சிடப் பெற்றுள்ளன.

1979 மார்ச் 10]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை

நெசவாளர் சங்கங்களில் தேங்கியுள்ள துணிக.

*வினா எண். 336— திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு கைத்தறி, பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நெசவாளர் சங்கங்களில் தேங்கியுள்ள ஜவுளிகளை கொள்முதல் செய்ய செயற் குறிப்புகள் உண்டா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : இம்மாநிலத்தில் உள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிகளில் சுமார் 50 சத வீதம் மதிப்புடைய துணிகளை மேற்படி சங்கங்களே நேரடியாக பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விற்பனை செய்கின்றன. மீதமுள்ள 50 சத வீதம் சரக்குகளை ''கோ-ஆப்டெக்ஸ்'' நிறுவனம் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து தனது விற்பனை நிலையங்கள் மூலமாகவும், ஏஜெண்டுகள் மூலமாகவும் விற்பனை செய்கின்றது.

*Handloom Industrial Estates at Narikkalpatti.*

*Q. No. 337—Thiru S. M. Vasan : Will the Hon. the Minister for Handlooms and Textiles be pleased to state—

(*a*) whether a large section of the weavers community at Narikkalpatti in Palani constituency have been urging the Government to sta a Handloom Industrial Estate and Training Centre ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) ஆம்.

(ஆ) தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒன்றினை நரிக்கல்பட்டி கிராமத்தில் ஆரம்பிப்பதற்காக கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரிடமிருந்து ஒரு செயற்குறிப்பு பெறப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் அங்கு பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்கானசெயற் குறிப்பு அரசிடம் இல்லை.